செய்தி வெளியீடு எண்: 583 நாள்: 05.10.2012

பத்திரிகைச் செய்தி

# சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவிதொகை விண்ணப்பிக்க காலவரம்பு நீட்டிப்பு

தமிழ்நாட்டில் வாழும் மதவழி சிறுபான்மையினரான கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர் மற்றும் பார்சி பிரிவைச்சார்ந்த ஐடிஐ, ஐடிசி, என்சிவிடி, பாலிடெக்னிக், டிப்ளோமா, இளங்கலை /,முதுகலை பட்டப்படிப்புகள், எம்பில், ஆராய்ச்சி படிப்பு (தொழிற்கல்வி/தொழில்நுட்பக் கல்வி நீங்கலாக ) பயிலும் மாணவ–மாணவியர்கள் பள்ளி மேற்படிப்பு (புதியது மற்றும் புதுப்பித்தல்) கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான காலவரையரை **30.09.12** லிருந்து **31.10.2012** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுவரை பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்காத தகுதிவாய்ந்த சிறுபான்மையின மாணவ–மாணவியர்கள் இந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தி www.momascholarship.gov.in என்ற இணையதளத்தில் **Online** மூலம் விண்ணப்பித்து கல்வி நிலையங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் அவ்விண்ணப்பங்களை படியிறக்கம் செய்து, அத்துடன் மதிப்பெண் சான்றிதழ், சாதி, வருமானம், கல்விக்கட்டணம் செலுத்திய ரசீது, இருப்பிட முகவரி, வங்கி கணக்கு எண் (Core Bank Service Account Number, IFS Code)ஆகிய சான்றாவணங்களை இணைத்து கல்வி நிலையங்களில் **31.10.2012**க்குள் சமர்ப்பிக்கவே ண்டும்.

இதுவரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும்போது மாணவ/மாணவியர்களால் முழுவிவரங்கள் பூர்த்தி செய்யாமல் பல விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. அவ்விண்ணப்பங்களில் முழு விவரங்களை உடனடியாக பூர்த்தி செய்து / குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மேலும் தாமதமின்றி அவ்விண்ணப்பங்களை கல்வி நிலையங்களுக்கு ஆன்லைன் மூலம் தவறாது சமர்ப்பித்தல் வேண்டும்.

கல்வி உதவித்தொகை மாணவ–மாணவியர்களின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படவுள்ளதால் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது வங்கி கணக்கு விவரங்களையும் மாணவ–மாணவியர்கள் தவறாது சமர்ப்பிக்கவேண்டும்

கல்வி நிலையங்கள் மேற்படி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பங்களை அவ்வப்போது பரிசீலித்து தகுதிபெற்ற விண்ணங்களை ஆன்லைமூலம் பரிந்துரை செய்யவேண்டும். இவை தொடர்பான கேட்புப்பட்டியல்கள் மற்றும் சான்றாவணங்களை **31.10.2012**க்குள் தவறாது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் விவரங்கள் தேவைப்படின் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் உதவிக்கு சிறுபான்மையினர் நல ஆணையர் அலுவலக தொலைபேசி **(Help Line) 044 28523544** தொடர்பு கொள்ளலாம்.

சிறுபான்மையினர் நல ஆணையர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**